13.3.2026

<u>அ.வ.எண்.12/2008</u>

வா.சா.1 சுந்தரம் த/பெ. குள்ளுபடையாச்சி

12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் ச.எண்.543 ஆகும். அந்த சொத்தின் கிழக்கில் அம்மையப்ப படையாச்சியின் நிலம் உள்ளது. அந்த சொத்து தற்போது அவரது மகன் கணேசன் என்பவருக்கு பாகபிரிசினையில் ஒதுக்கீடு செய்து அவரிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு தெற்கில் ரோடு செல்கிறது. அதற்கு மேற்கில் இராசிபுரம் முதல் முருங்கப்பட்டி செல்லும் ரோடு உள்ளது. தாவா சொத்தின் வடபுறத்தில் பாதை உள்ளது. அதாவது சங்கான்முத்து என்பவரது நிலத்திற்கு தெற்கில் உள்ளது என்றால் சரிதான். சங்கான் என்பவரின் வாரிசுகள் அந்த நிலத்தை விற்பனை செய்து அங்கு மனைகளாக பிரிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தற்போது அதாவது 5ஆண்டுகளுக்குள் தாவா சொத்தின் வருவாய்துறை ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. தாவாசொத்து தற்போது ச.எண்.543/1 மற்றும் 543/2 ஆகியவைகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

என்னுடைய வகையராவை உக்கிலிப்பட்டி வகையரா என்று சொல்வார்கள் என்றால் சரிதான். அவர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்பு உக்கிலிப்பட்டி என்ற ஊரில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்றால் சரிதான். அப்போது 7 நபர்கள் அந்த ஊருக்கு வந்தார்களா என்றால் ஒருநபர் தான் வந்தார். அப்படி வந்தவர் பெயர் உக்கிலிப்பட்டி குள்ளுபடையாச்சி ஆவார். அவர் எனது கொள்ளுதாத்தா ஆவார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5மகன்கள். அந்த 5மகன்களுக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் 5 முதல் 6 வாரிசுகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். அந்த நபர்கள் திட்டக்குடி அருகில் உள்ள கொரக்கை என்ற ஊரில் உள்ள கோவிலை குலதெய்வமாக கொண்டவர்கள் என்றால் சரிதான். அந்த குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு கொரக்கையில் உள்ள சாமிகளின் பெயர்களை வைத்தார்கள் என்றால் சாமிபெயர்களை பயன்படுத்தினார்கள். அந்த குடும்பத்தில் குள்ளுபடையாச்சி, கருப்பண்ணபடையாச்சி, ஆறுமுக படையாச்சி, பெரியசாமிபடையாச்சி, சாந்தபடையாச்சி என்று ஒவ்வொரு குடும்பத்திலும் சாமி பெயர்களை வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். தற்போது எனது பங்காளிகள் அணைப்பாளையம் செல்லும் வழியில் உள்ள வடக்கு கொட்டாய் என்ற ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

எங்கள் குடும்பத்திற்கு வடக்கு கொட்டாயில் உள்ள சொத்துக்களை எனது தகப்பனாரின் முப்பாட்டனார் குள்ளபடையாச்சி என்பவர் அந்த சொத்துக்களை வாங்கினார். குள்ளபடையாச்சி சொத்தை கிரையம் வாங்கியதற்கு ஆவணம் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. குள்ளபடையாச்சி வடக்கு கொட்டாயில் உள்ள சொத்துக்களை பல கிரையங்கள் படி வாங்கியுள்ளார். பல கிரையங்கள் படி எவ்வளவு சொத்து கிரையம் பெற்றார் என்றால் 42 ஏக்கர் ஆகும். அந்த 42 ஏக்கர் நிலங்கள் கிரையம் பெற்றதற்க ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஒப்படைத்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் குள்ளபடையாச்சி கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பாகபிரிவினை

ஆவணத்தில் எத்தனை நபர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் 5 நபர்கள் செய்து கொண்டார்கள். அதற்கு மேற்பட்ட நபர்கள் அந்த பத்திரத்தில் பாகபிரிவினை செய்து கொண்டார் தவறா என்றால் இல்லை சரிதான்.

தாவா முதல் அயிட்ட சொத்து சந்திரசேகரபுரம் அகரஉறாரம் கிராமத்தில் தெற்கு எல்லையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா 2ம் அயிட்ட சொத்து அக்ரஉறாரத்திற்கும் மேற்கில் அமைந்துள்ளது. அந்த சொத்தின் ச.எண்.422/2பி ஆகும். அந்த சொத்தின் பரப்பளவு 1 ஏக்கர் 32 செண்ட் ஆகும். மேற்சொன்ன இரண்டு சொத்துகளுக்கும் எனது தாவாவில் நான்கு எல்லைகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

தாவா தாக்கல்செய்யும் போது இறந்துபோன முத்துசாமி பெயரில் உள்ள முதல் இரண்டு இலக்க சொத்துக்களின் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் பொது சொத்துக்கள் என்று காட்டுவதற்கு கிரைய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இறந்துபோன முத்துபடையாச்சி 12.12.1994ல் தாவா முதல் இரண்டு இலக்க சொத்துக்களை கிரையம் வாங்கினார். வா.சா.ஆ.21 ஆவணத்தில் இறந்துபோன முத்து படையாச்சி தனது சுயசம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் நானும், எனது சகோதரர்கள் மற்றும் தகப்பனார் பணம் கொடுத்து சொத்துக்கள் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது சந்திரசேகரபுரம் கிராமத்தில் மாரியம்மன் கோவிலுக்கு கிழக்கில் நடுப்பையன் என்கிற ஆறுமுக படையாச்சி என்பவர் இருந்தார் என்றால் சரிதான். அந்த நபரும் எங்களுடைய உக்கிலிப்பட்டியார் வகையராவை சேர்ந்தவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 7 வரை உள்ள ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் உக்கிலிப்பட்டி குள்ளபடையாச்சி மகன் ஆறுமுக படையாச்சி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த பத்திரங்கள் மூலம் வெவ்வேறு நபர்களிடம் இருந்து சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்கள் மிட்டா மற்றும் ஜமீன் சொத்துக்கள் என்றால் அதில் இனாம், மிட்டா மற்றும் ஜமீன் சொத்துக்கள் கலந்துள்ளது. அந்த பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்களுக்கு சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்லமுடியாது.

வா.சா.ஆ.9 முதல் 19 மற்றும் 47 வரையில் உள்ள ஆவணங்களில் குள்ளபடையாச்சி மகன் நடுப்பையன் என்கிற ஆறுமுகபடையாச்சி கிடியைம் பெற்ற சொத்துக்கள் என்றால் வா.சா.ஆ.9 முதல் 17 மற்றும் 47 வரையில் உள்ள சொத்துக்கள் அவர் வாங்கியது. அந்த ஆவணங்களில் கண்டெ சாத்துக்கள் வெவ்வேறு நபர்களிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள சொத்துக்களுக்கு பரப்பளவு மற்றும் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சில பத்திரங்களில் உள்ளது.

முத்துபடையாச்சி மற்றும் பெருமாள் படையாச்சி பெயரில் ஒரு சொத்து கிரையம் வாங்கிய போது அனைவரும் ஒன்றாக வசித்து வந்தோமா என்றால் ஒன்றாக தான் இருந்தோம். கச்சராபாளையம் ஊரில் உள்ள சொத்தை முத்துபடையாச்சி மற்றும் பெருமாள் படையாச்சி பெயரில் சொத்து கிரையம் செய்யும் போது நானும், எனது தகப்பனாரும் எங்களது பெயரிலும்

கிரைய பத்திரம் எழுதவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தினோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.21 ஆவணத்தில் சொத்தை கிரையம் செய்யும் போது எங்களது பெயரையும் சேர்க்க வேண்டும் என்ற நிர்பந்தப்படுத்தினோமா என்றால் இல்லை. முத்துசாமி படையாச்சி அந்த சொத்தை கிரையம் பெறும்போது அவருக்க திருமணம் நடந்து விட்டது என்றால் சரிதான்.

திருமணத்திற்கு பின்னர் முத்துசாமி படையாச்சி தாவா முதல் இலக்க சொத்தில் வந்து வீடு கட்டி குடியேறினார் என்றால் சரிதான், அவர் தனியாக வந்துவிட்டார். அந்த சொத்தில் முத்துசாமி படையாச்சி தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. முத்துசாமி படையாச்சி சொத்தை விவசாயம் செய்யகூடாது என்று நானும் மற்றவர்களும் இடைஞ்சல் செய்ததால் 25 ஆண்டுகள் சொத்துக்கள் அனைத்தும் விவசாயம் செய்யப்படாமல் தரிசாக இருந்தது என்றால் சரிதான்.

மேற்சொன்ன சொத்துக்கள் ஊரில் உள்ள நபர்களை வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்துபடி முத்துசாமி சொத்தை அனுபவம் செய்து இறந்து விட்டார் என்றால் சரியல்ல. முத்துசாமி உயிருடன் இருந்தபோதே 76 செண்ட் நிலத்தை 7ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். முத்துசாமி மேற்சொன்ன 76 செண்ட்டை சொத்தின் தென்புறத்தில் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி சொத்தை கிரையம் பெற்ற பின்னர் அவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்ததால் அவர் 11ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்துவிட்டார். அவர் சொத்துக்களை மனைகளாக பிரித்து விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். அந்த மனை பிரிவிகள் சந்திரசேகரபுரம் பஞ்சாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனைகள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.37 ஆவணத்தில் தாவா சொத்து மனைகளாகபிரிக்கப்பட்டு பஞ்சாயத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் மணி என்பவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அப்போது அவர் சந்திரசேகரபுரம் பஞ்சாயத்து தலைவியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் எந்த தேதியில் தலைவியாக இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.32 ஆவணம் சந்திரசேகரபுரம் பஞ்சாயத்திற்கு தடபாத்தியம் குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் 5869.1/4 சதுரடியை பஞ்சாயத்திற்கு தானமாக செலுத்தியுள்ளார் என்றால் அந்த பத்திரத்தில் அவ்வாறுதான் உள்ளது. தற்போது பஞ்சாயத்திற்கு தலைவர் உள்ளாரா என்றால் இல்லை. பஞ்சாயத்தை தற்போது யார் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. பஞ்சாயத்திற்கு தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறர் என்றால் தெரியாது.

சண்முகவடிவேலும், ஜெகநாதனும் எத்தனை மனைகளாக பிரித்துள்ளார்கள் என்றால் தெரியாது. எங்கள் ஊரில் கால்நடை மருத்துவர் சதீஸ் என்பவர் இருக்கிறாரா என்றால் கால்நடை மருத்துவர் இருக்கிறார் அவர் பெயர் தெரியாது. அவர் மனைபிரிவில் வீடு கட்டியுள்ளாரா என்றால் தெரியாது. மத்தி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. துரை என்கிற குள்ளபடையாச்சி தெரியுமா என்றால் தெரியாது. அந்த நபர்களை இந்த வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

நிலம் சாலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டு தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

எனக்கு தெரியாது. அந்த உட்பிரிவு 543/1 மற்றும் 543/2 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் உட்பிரிவு செய்யக்கூடாது என்று நான் வட்டாச்சியருக்கு ஆட்சேபணை கொடுத்துள்ளேன். நில ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா முதல் இலக்க சொத்து முத்துசாமி படையாச்சியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதை தான் கருப்பன் என்பவா் கிரையம் பெற்றுள்ளாா் என்றும், அந்த கிரையத்தை இந்த வழக்கு கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. முத்துசாமி படையாச்சியின் வாரிசுகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- K.Sundaram

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.